**தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 அபிப்பிராயம்**

---

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான

பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் அரச சேவையில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான ஆரம்பக் கொடுப்பனவை கணக்கீடு செய்யும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட வருமானத் தலைப்பின் கீழ் | சரிசெய்தல் இன்றஅளவில் விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மோட்டார் சைக்கிள்களுக்கு உரித்துப்பெறும் உத்தியோகதத்ர்கள் சேவை புரியும் அலுவலகங்களுக்கு வருமானம் கணக்கீடு செய்யப்படும் முறை தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் அந்த அலுவலகங்களினால் தவறுதலாக வேறு கணக்குகளுக்கு வருமானம் |

| | | |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2016 ஆம் ஆண்டில் மொத்த வருமான சேகரிப்பு ரூபா 222 மில்லியன், வருமான மீள் கொடுப்பனவு ரூபா 101 மில்லியன் மற்றும் தேறிய வருமானம் ரூபா 121 மில்லியன் எனத் தவறுதலாக கணக்கீடு செய்ததை சீராக்கலுக்கு மாத்திரம் இவ்வருமானக் கணக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதில் 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் பணமாக மீள் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 28 மில்லியனாக இருந்தது, 2016 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை கணக்கிற்கு வருமானம் பெறுவனவு இடம்பெறுகின்ற போதும் கிடைக்க வேண்டிய மீதி காணப்படுகின்றதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தி சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்தகைய தவறான கணக்கு வைத்தல்களை சீர்செய்யுமாறு அவ்வப்போது ஆலோசணை வழங்கப்பட்டிருந்ததுடன் சரிப்படுத்தல் மிக விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **மதிப்பீடு தயாரிப்பதில் பலவீனங்கள்.** | | |
| (அ) நிகழ்ச்சித்திட்டம் 01 | | |
| (i) 02 செலவின விடயங்களின் மொத்தமான ரூபா 4.7 மில்லியனான நிதிஏற்பாடு நி.பி 66/69 நிதி ஏற்பாடுகளின் கீழ் 20 சதவீதம் முதல் 440 சதவீதம் வரை அதிகரித்த போதும் 08 செலவின விடயங்களின் கூட்டுத்தொகையான ரூபா 66.6 மில்லியனான | மதிப்பீடுகள் நடைமுறை சாத்தியமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | மதிப்பீடு இயலுமானவரை சரரியாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தேவையான சந்தர்ப்பங்களின் போது நிதிப் பிரமாணங்கள் மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி ஏற்பாடு மாற்றல் ஒட்டுமொத்த நிதிஏற்பாடுளையும் முகாமை செய்ய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | நிதி ஏற்பாடு 11 சதவீதம் முதல் 27 சதவீதம் வரை குறைத்தல் இடம் பெற்றிருந்தது. | | |
| (ii) | 2019 ஆம் ஆண்டின் மீண்டெழும் செலவின விடயத்தின் கீழ் ஆரம்ப மதிப்பீடாக ரூபா 525 மில்லியனும் குறைநிரப்பு ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 52 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதி அளவில் அதில் ரூபா 1.7 மில்லியன் எஞ்சியிருந்தது. அவ்வாறே மூலதன செலவின விடயங்களின் கீழ் குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் நி.பி 66/69 இன் கீழ் மொத்தம் ரூபா 19.6 மில்லியன் நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டம் 02<br>----------------------------- | | |
| i | 2 செயற் திட்டங்களின் 04 மூலதனச் செலவினங்களில் ரூபா 34,377 மில்லியனான நிதி ஏற்பாடு நி.பி 66 இன் கீழ் 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை அதிகரிப்பும் ரூபா 40,129.5 மில்லியனான செலவின விடயமொன்றின் நிதிஏற்பாடு 13 சதவீதம் வரை குறைப்பும் இடம் பெற்றிருந்தன. | மதிப்பீடுகள் நடைமுறை சாத்தியமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | மதிப்பீடு இயலுமானவரை சரியாக தயாரிப்பட்டுள்ளதுடன் தேவையான சந்தர்ப்பங்களின் போது நிதிப் பிரமாணங்கள் மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி ஏற்பாடு மாற்றி ஒட்டுமொத்த நிதி ஏற்பாடுளையும் முகாமை செய்ய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. |
| ii | 03 செயற் திட்டங்களின் மூலதனச் செலவினங் களுக்காக ரூபா 49,525 மில்லியனான தேறிய நிதி ஏற்பாட்டில் 22 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது | - மேற்படி- | முன்மொழிவுகளை செயற்படுத்தம் பொறுப்பு வரிசை அமைச்சினால் நிதிஏற்பாடு கோரப்படாத சந்தர்ப்பததிலும் முன்மொழிவுகளை செயற்படுத்தும் போதும் செயன்முன்னேற்றம் தொடர்பாக திருப்தியடையாத சந்தர்ப்பத்தில் நிதிஏற்பாடு விடுவிக்கப்படுவதால் இங்கு தயாரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | மதிப்பீடுகளில் சரியானதன்மை தொடர்பாக எவ்வித சிக்கலொன்றும் இல்லை |
| iii. | 03 செயற் திட்டங்களின் 02 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 11 மூலதனச் செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 4,075 மில்லியனான தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு 100 சதவீதமாக இருந்ததுடன் 03 செலவின விடயங்களில் ரூபா 1,500 மில்லியனான மொத்த தேறிய ஏற்பாட்டில் சேமிப்புக்கள் 32 சதவீதத்திலிருந்து 63 சதவீதம் வரையான வீச்சிலும் 12 மூலதன செலவின விடயங்களில் ரூபா 10,300 மில்லியனான மொத்த தேறிய ஏற்பாட்டில் சேமிப்புக்கள் 20 சதவீத்திலிருந்து 85 சதவீதம் வரையான வீச்சிலும் இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| iv | 03 செயற் திட்டங்களின் 02 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 11,000 மில்லியனான ஆரம்ப மதிப்பீட்டில் நி.பி 66 இன் கீழ் 60 சதவீதம் மற்றும் 80 சதவீதம் குறைத்தல் இடம்பெற்றிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| v | 2509-27 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் ஆரம்ப மதிப்பீடொன்று இடம்பெறாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது நி.பி 66 மாற்றல் மூலம் ரூபா 100 மில்லியன் இச்செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 2.3 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மரணித்த இரண்டு இறந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 305,621 ஆன கடன் மீதி 18 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் இருந்து வருவதுடன், இது முன்னைய ஆண்டின் கணக்காய்வு ஐயவினாக்கள் மூலமும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது இக்கடன் மீதிகளை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை | கடன் மீதிகள் தீர்வு செய்வதற்கு முடியுமான ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். | கடன் மீதிகளை தீர்வுசெய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 2019 திசெம்பர் 31 ஆந் திகதி காணப்பட்ட மீதியிலும் இதுவரை ரூபா 101,561.30 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | அவ்வாறே சேவையை விட்டுச்சென்ற உத்தயோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 150,119 ஆன கடன் மீதி அறவிடுவது தொடர்பாக இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் கணக்காய்வு ஐயவினாக்கள் மூலமும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அம்மீதிகளை அறவிடுவதற்கு இதுவரை முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வரவு செலவு திட்ட யோசனைகளுக்குரிய ரூபா 49,525 மில்லியனான மொத்த மூலதன நிதிஏற்பாட்டில் 22 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தன. | வரவு செலவு திட்ட யோசனைகள் பொருளாதார ரீதியாகவும் பயனுள்ள விதத்தில் செயற்திறனாக நிறைவேற்று வதற்கு உத்தியோகத்தர் கள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென | முன்மொழவுகளை செயற்படுத்தும் பொறுப்பினை உடைய அமைச்சினால் நிதி ஏற்பாடுகளை கோராத சந்தர்ப்பத்திலும் முன்மொழிவுகளை செயற்படுத்துவதன் செயன் முன்னேற்றம் தொடர்பாக திருப்தியடையாத சந்தர்ப்பங்களில் நிதிஏற்பாடு விடுவிக்கப்படுவதால் இங்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் சரியானதன்மை தொடர்பாக எந்தவொரு சிக்கலும் காணப்படவில்லை. |
| (ஆ) | 13 பாதீட்டு முன்மொழிவுகளின் ரூபா 4,075 மில்லியனான மொத்த தேறிய ஏற்பாட்டில் சேமிப்புக்கள் 100 சதவீதமாக இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 03 பாதீட்டு முன்மொழிவுகளின் மொத்த மீண்டெழும் தேறிய ஏற்பாடான ரூபா 1,500 மில்லியன் தொகையில் சேமிப்புக்கள் 32 சதவீதம் முதல் 63 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 12 பாதீட்டு முன்மொழிவுகளின் மொத்த மூலதன தேறிய ஏற்பாடான ரூபா 10,300 மில்லியன் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொகையில் சேமிப்புக்கள் 20 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | | |
| (உ) | 04 பாதீட்டு முன்மொழிவுகளில் ரூபா 32,000 மில்லியனான ஆரம்ப மதிப்பீட்டில் நி.பி 66 இன் கீழ் 10 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | பாதீட்டு முன்மொழிவுகளின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பால் குவளையொன்று வழங்குவதற்கு ரூபா 1,000 மில்லியன் மீண்டெழும் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் அதில் ரூபா 100 மில்லியன் மூலதனச் செலவினங்களுக்கு நி.பி 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**3.2 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தற்காலிகமாக வைப்புக்களை நிறுத்தி வைக்கும் கணக்கில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 177.5 மில்லியனான மீதியொன்று காணப்பட்டது. | தீர்வுசெய்யும் செயற்பாடுகளை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுதத்ல் | 146,381 சைக்கில்களின் தவணை மற்றும் வட்டி 40 ஆம் இலக்க தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுவதால் இதன் கீழான வைப்புக்கள் குறித்த மோட்டார் |

| | | | |
|---|---|---|---|
| | இவ்வைப்புக்கள் கணக்கினுள் அரச சேவையில் வெளிக்கள உத்தியோகத்தர்களால் மோட்டார் சைக்கில்களின் கடனை தீர்வு செய்வதற்கு செலுத்திய ரூபா 116.7 மில்லியன் தொகை ஏனைய பெறுவனவுகள் வருமானக் கணககிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | சைக்கில்களுக்காக தீர்வு செய்யும் இயலுமை காணப்படவில்லை. |
| (ஆ) | தேசிய பாதீட்டு திணைக்களததினால் கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் நிதிக்குத்தகையின் கீழ் 2011-2012 ஆம் ஆண்டுகளில் 2,067 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அதில் 792 வாகனங்கள் திணைக்களத்தின் பெயரில் மாற்றப்பட்டிருந்தன. அவ்வாறே 169 வாகனங்கள் கையேற்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டதுடன் 1106 வாகனங்கள் தொடர்பான கையளிப்பு தொடர்பான தகவல்கள் வழங்கப்படவில்லயென அறிவிக்கப்பட்டிருந்தது, 2014 ஆம் ஆண்டின் போது (CHOGM) Common Heads of Government Ministry இற்காக 179 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் 173 வாகனங்கள் (29 கோஸ்டர் பஸ், 144 கார்கள்) தொடர்பாக கையேற்கப்பட்ட விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கையேற்பு செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் உரிய திணைக்களத் தலைவர்களின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளதால் வாகனங்களை கையேற்குமாறு அத்தலைவர்களுக்கும் கையளிக்குமாறு இலங்கை வங்கிக்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கும் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பாதீட்டு திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளதால் பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களால் கையேற்பு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தில் 08 பதவிகள், இரண்டாம் மட்டத்தில் 07 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 03 பதவிகளாக 18 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவ்வெற்றிடங்கள் காரணமாக கடமைகளை நிறைவேற்றும் போது சிக்கல்களுக்கு முகங் கொடுப்பதாக (செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம்) அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடங்களாக உள்ள பதவிகளை பூர்த்தி செய்யுமாறு அவ்வப்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அதற்காக உத்தியோகத்தர்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |